★ மதுரை மாவட்டத்தில் மாபெரும் எழுச்சி ★

Phone No 4502 Regd. No. M. 5458

அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (12-6-50) வெளியீடு (13-6-50) [இதழ் 276

பாண்டியநாட்டு மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்ட காட்சி

.....................(:—:)...................

மக்களிடையேமட்டிலார்வுபுத்துணர்ச்சி

............—)............

ஆட்சியாளரின் அடாத - - - செயல்களுக்குக் கண்டனம்

———(:0:)———

பாசிச வெறியர்களுக்கு எச்சரிக்கை

———(...)———

'விடுதலை வீரர்களின் பாசறையே தி. மு. கழகம்' என முழக்கம்

.........(—).........

சோழவந்தானில் மதுரை மாவட்ட மாநாடு ஆரம்பம்

"சக்திகேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதிஎல்லோர்க்கும் கிடைக்கும்படி செய்யவேண்டு என்பது, பொருளாதாரத் துறையிலே நாம் கொண்டிருக்கும் கோட்பாடாகும் சமுதாயத்தை ‥ பேதப்படுத்திச் சின்னாபின்னமாக்கிவரும் சாதி வேறுபாடு. சமயவேறுபாடுகளையெல்லாம் அழித்து மனிதனை மனிதன் என்று நினைக்கும்படி யாவரையும் செய்யவேண்டும் என்பது, சமுதாயத்திலே நாம் காணவிரும்பும் குறிக்கோளாகும். அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்றிலேயும் அடிமைப்பட்டுக்கிடக்கும் திராவிடத்தை விடுதலை பெறச்செய்யவே, நாம் முன்னேற்றக் கழகம் கண்டுள்ளோம்."

"திராவிட முன்னேற்றக்கழகம் இலட்சியத்திற்கான விடுதலைப் போராட்டம் நடத்துவதற்காகத் தோன்றிய கழகமேயல்லாமல், சுயநலத்திற்காக அரசியல் சூதாட்டம் நடத்தத் தோன்றியதல்ல." என்று தோழர் ஆவுடையப்பன் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

சோழவந்தான், ஜூன் 10—

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதலாமது மாநாடு, இன்று சோழவந்தானில் வெகு சிறப்பாக ஆரம்பமாயிற்று.

மாநாட்டிற்குப் பல இடங்களிலிருந்தும், மக்கள் வந்து குழுமியிருந்தனர். நடைபெற்றது மாவட்ட மாநாடேயாயினும், மாகாண மாநாடு போன்று மிகச் சீரும் சிறப்புடன் நடைபெற்றது என்றால் அது மிகையாகாது.

மாநாடு நடைபெறும் இடம் புகைவண்டி நிலையத்தின் அருகாமையில் சுமார் 26,000 சதுர அடி நிலப் பரப்பில், மிக நன்றாக அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. நகர், பூராவிலும் இயக்கக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டும், 'தன்மானத்துடன் வீரம் பூணுவோம். தனித் திராவிடத்தைக் காணுவோம்' "இன்பத் திராவிடத்தின் தளபதிகளே வருக! வருக!!" 'இன்பத் தமிழைக் காப்போம், இந்திச் சனியனை ஒழிப்போம்'' என்பனபோன்ற இலட்சியக் கொள்கைகள் பொறிக்கப்பட்ட "ஆர்ச்" தட்டிகளும் நகரை அலங்காரம் செய்தன. எங்குபார்த்தாலும் மாநாட்டைப்பற்றிய முழக்கமாகவே இருக்கிறது. மாநாட்டும் பந்தலில் பலவிதமான புரட்சிப் பொன்மொழிகள் அடங்கிய அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அத்துடன், மின்சார விளக்குகளும் பலவிதமான கடைகளும் [illegible] நாட்டைச் சிறப்புறச் செய்தன.

தலைவர்கள் வருகை

நேற்று இரவு மாநாட்டுத் திறப்பாளர் குடந்தைத் தோழர் கே. கே. நீலமேகம் வந்து சேர்ந்தார். பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, மாநாட்டுத் தலைவர் தோழர் ஈ. வெ. கி. சம்பத், பிரசாரக் குழுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அமைப்புக் குழுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் சேலம் ஏ. சித்தையன், வேலூர் சி. பி. சிற்றரசு, சென்னை கோவிந்தசாமி, ஈழத்தடிகள் இராம. அரங்கண்ணல், நீடாமங்குறிச்சி சோமசுந்தரம், பொன்மலை பராங்குசம், அம்பில் தருமலிங்கம், குடந்தை பராங்குசம் மற்றும் பலரும் வந்து சேர்ந்தனர். தலைவர்களை வரவேற்க புகைவண்டி நிலையத்தில், தொண்டர்கள் அணிவகுத்து நின்றனர். வண்டியிலிருந்து தலைவர்கள் இறங்கியவுடன், வரவேற்புக்குழுவினர்கள் சார்பாக தோழர் தா. ஆவுடையப்பன் எல்லோரையும் அன்புடன் வரவேற்றார்.

அனைவருக்கும் பகல் உணவு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பின்னர், தலைவர்கள் வாதிருந்த பிரதிநிதிகள் எல்லோரும் தங்கள் - தங்கள் அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொண்டும், இயக்க நண்பர்களோடு பேசிக்கொண்டும் இருந்தனர்.

தொண்டர் படை

மதுரை தோழர்கள் சேது

(4-ம்பக்கம் பார்க்க)

போர்த்துகீசியா பயப்படவேண்டியதேயில்லை

கோவாபற்றி 'கார்டியன்' கருத்து

லண்டன், ஜூன் 11—

கோவா, டையூ, டாமன் ஆகிய போர்ச்சுகீசிய உடைமை பிரதேசங்கள் விஷயமாக இப்பொழுது போர்ச்சுகீசிய சர்க்கார் கொண்டுள்ள பீதி அர்த்தமற்றது என்று 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகையின் டில்லி நிருபர் கூறுகிறார்.

இப்பிரதேசங்களின் எதிர்காலத்தைப்பற்றி இந்திய சர்க்கார் போர்த்துகீசிய சர்க்காரிடன் சமரசப்பேச்சு நடத்தியே ஒரு முடிவு செய்யும் என்றும் அவர் தெளிவாக்குகிறார்.

செல்வாக்குள்ள பலகோவாஸ்தானங்கள் 'இந்திய சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கோரி தீர்மானம் நிறைவேற்றுவதாலும் 'இப்பொழுதோ அல்லது பின்போ இக்காலனிகள் இந்தியவுடன் சேர்ந்தே தீர வேண்டும், என்று பண்டித நேரு ஆணித்தரமாக கூறியிருப்பதினாலும் இந்த பீதி போர்த்துகீசிய சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கவேண்டுமெனத் தெரிகிறது.

செயற்கை உணவு

நியூயார்க், ஜூன் 11—

உலகிலுள்ள கோடிக்கணக்கானோர்களின் தேவையை பூர்த்தி செய்ய செயற்கை உணவை தயாரிக்க முடியும் என்று மஸாசூஸெட்ஸ் டெக்னாலஜி இன்ஸ்டிட்யூட் சேர்மன் கார்ல் காம்டன் கூறினார்.

உலகம் உண்மையில் உணவுக்கு அவதிக்குள்ளாகும் போதுதான் இதை உபயோகிக்கும் அவசியம் வரும் என்று அவர் கூறினார்.

தென்னாப்பிரிக்காவில் கம்யூனிஸ ஐந்தாம்படை!

தென்னாப்பிரிக்காவில் கம்யூனிஸ்டு ஸ்தாபனங்கள்மீது தடைவிதிக்கப்பட்டிருக்கும் போது ரஷ்யாவின் உதவி பெற்று ஒரு ஐந்தாம்படை ஸ்தாபனம் வேலை செய்துவருவதாகவிடைத்துள்ள தகவலின்பேரில் பாதுகாப்பு போலீஸ் மும்முரமாக விசாரித்து வருகின்றனர்.

[illegible] ஒரு [illegible] இங்கு ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. டாஞ்சியரிலிருந்து ரஷ்ய ஏஜெண்டுகள் வருவதாக செய்தி கிடைத்ததின்பேரில் ஒவ்வொரு துறைமுகங்களிலும் காவல் கண்காணிப்பு அதிகரித்திருக்கிறது.

ரஷ்யாவில் இரண்டாவது [illegible] [illegible] [illegible] [illegible].

ஹோசிமின் தெ. கி. ஆசிய கம்யூனிஸ்டு சேனாதிபதியாவார்?

———(0)———

வியட்னும் தலைமைப் பதவிக்கு வேறொருவர் நியமனம்

பாரிஸ், ஜூன் 11—

தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்திற்கே தலைவராக ஹோசிமின் நியமிக்கப்பட்டிருப்பதாக இங்கு கிடைத்துள்ள ஊர்ஜிதமாகாத செய்திகள் கூறுகின்றன.

அவர்வகித்துவந்தவியட்னும் இப்பொழுது டாங்க்ஸான்-கூ சர்க்கார் தலைமைப் பதவியை என்பவர் வகித்து வருவதாகக் கூறப்படுகிறது.

டாங்க்ஸான் டோங்கினைச் சேர்ந்தவர் என்றும், 1939-ம் ஆண்டு முதல் அரசியல் குற்றங்களுக்காக இவர் பன்முறை சிறை சென்றிருப்பதாகவும் 1941-ல இந்தோ கம்யூனிஸ்டு கட்சியில் இவர் சேர்ந்தார் என்றும், 'விமான், [illegible]'ப் பத்திரிகை கூறுகிறது.

சமூக முன்னேற்றத்திற்கான சில திட்டங்கள்

———(0)———

பிரிட்டிஷ் முறைகளை இந்தியா பின்பற்றும்

லண்டன், ஜூன் 11—

சமூக முன்னேற்றத்திற்கான சில திட்டங்களை அமுல் செய்ய இந்திய சர்க்கார் உத்தேசித்திருப்பதால் இங்குள்ள சமூக முன்னேற்ற திட்டங்கள் எவ்வளவுதூரம் பலனளிக்கிறதென்பதை அறிவதில் இங்குள்ள இந்தியர் ஆவலாக இருக்கின்றனர், என்று தெரிய வருகிறது.

'பிரிட்டனின் தேசிய இன்ஷியூரன்ஸ் திட்டத்தை லண்டன் இந்தியர் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். இத்திட்டம் 1948-ல் ஜூலை 5-ந் தேதி ஆரம்பிக்கப் [illegible]து.

கரன்சிக்குள் கம்பி!

லண்டன், ஜூன் 11—

மின்னலால் தாக்கப்பட்டு மாண்ட ஒரு மனிதனின் பையிலிருந்த பாக்கி நோட்டுகளும், அந்த மின்னலால் பாதிக்கப்பட்டிருந்தனவென்பது தெரியவந்தது. கள்ள நோட்டுகளைக் கண்டுபிடிப்பதற்காக பிரிட்டிஷ் நோட்டுகளில் கண்ணுக்குப் புலனாகாத அளவுக்கு மெல்லிய கம்பிகள் நோட்டுகளுக்குள் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கம்பிகள் மின்னலால் பாதிக்கப்பட்டுள்ளனவாம்.

லண்டனில் ஹிட்லர்!

லண்டன், ஜூன். 14—

லண்டன் தியேட்டர், கிளப்பில் நடிக்கப்பட்ட "சவாபிராஸ்' என்கிற நாடகத்தில் ஹிட்லரும் அவர் காதலியும் மாண்டனர் என்பது உண்மையல்லவென்றும் அவர்கள் உயிருடன் இருப்பதாகவே சித்தரிக்கப்பட்டது.

அயல் நாட்டிலாகாவில் விளம்பர ஆராய்ச்சி பிரிவில் வேலை செய்யும் தோழர் ஹியூட்தர்லாந்து என்பவர் இந்நாடகக் கதையை எழுதியவர்.

இந்நாடகத்தின் [illegible] கட்டத்தில் ஹிட்லர் தன்னைப் போல உள்ள ஒருவரை [illegible] ஸ்லரியில் வைத்துவிட்டு [illegible]ப்பிச் செல்வதாக சித்தரிக்கப்படுகிறது.

எதற்காக இந்த நாடகம் நடிக்கப்பட்டது இதன் அர்த்தம் என்ன என்பது ஒன்றும் தெளிவாக்கப்படவில்லை.

மாலை மணி

சென்னை 12—6—50 திங்கட்கிழமை

பர்மாவைப் பாருங்கள்!

"நிலச் சுவான்தாரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதை நான் எதிர்க்கிறேன்; அவ்வாறு கொடுக்கப்படுமானல் நாடு சீரழியுமென்பது என் எண்ணம்." பேசியவர் பர்மிய முதல் மந்திரி தோழர் தாகின்-நூ. பேசிய இடம் சர்க்கார் நிலப் பங்கீடு வெற்றி விழாப்பொதுக் கூட்டத்தில். அந்த மேடையில் சென்னை சர்க்கார் மந்திரி பக்தவத்சலனும் அமர்ந்திருந்தார்.

* * *

கம்யூனிஸ்டு நாடாகாமலே பொதுவுடமைக் கொள்கைகளை வேகமாக நடைமுறையில் கொண்டுவரும் நாடுகளில் பர்மாவும் ஒன்று. இந்தியாவுக்குப் பின்பு தான் பர்மா சுதந்திரம் பெற்றது; ஆனல் அங்கு செய்யப்பட்டுள்ள மாறுதல்கள் புரட்சிகரமானவை; சுரண்டி வாழும் முதலாளிகளின் எண்ணிக்கையும், பிச்சையெடுத்துண்ண வேண்டிய நிலையில் இருக்கவேண்டியவர்களின் எண்ணிக்கையும் சரிபாதியாகக் குறைத்துவிடப் பட்டுள்ளதென்று கூறலாம். எல்லாம் எல்லோருக்கே என்ற கொள்கை எவ்வளவு வேகமாகப் பர்மாவில் பரவுகிறதென்பதின் எதிரொலியே பர்மியப் பிரதமர் தோழர் தாகின்-நூவின் பேச்சு.

இந்தியாவுக்கு பர்மாவைவிட ஐந்து மாதங்களுக்கு முன்பே சுதந்திரம் கிடைத்தது. ஆனல் இதுவரை புரட்சிகரமானதொன்றும் செய்யப்படவில்லை; அதற்குக் காரணம் ஆளவந்தவர்களுக்கு அரசியல் தெரியாததோடு தெரிந்த கொஞ்ச அரசியலும் முதலாளித்துவ சாயல் படிந்துள்ள காரணத்தால். ஜமீன்தாரி ஒழிப்பு முறையைக் கொண்டு வந்தோம் என்று ஜம்பம் பேசியது சென்னை சர்க்கார்; ஆனல் மக்கள் பணம் பத்து கோடி ரூபாயை ஜமீன்தாரர்களுக்குக் கொடுத்துநாட்டில் முதலாளிகளின் எண்ணிக்கையைப் பெருக்கி வருகிறது. ஐக்கிய மாகாணத்திலும் அதே கதி. நானூறு ஐம்பது கோடி ரூபாய் ஜமீன்தாரர்களுக்கு நஷ்டஈடு!

ஆனல் பர்மாவில் நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு 12 ஏக்கர் நிலம்; சொந்தப் பயிரிடுவதற்கான கடன் உதவித் தரப்படுகிறது. இதுபோன்ற சீர்திருத்தம் இங்கு ஏன் செய்யக் கூடாதென்று கேட்டால் 'எல்லாம் நிதானமாகத்தானே செய்யவேண்டும்; அவசரப்பட்டால் சுதந்திரத்துக்கு ஆபத்து' என்று கூறுவதில் வெள்ளைக் குல்லா அணிந்த தோழர்கள் சிறிதும் சலிப்படைவதில்லை.

பர்மாவைப் பொறுத்தவரை ஒரு விதமான விளக்கம் தரப்படலாம். 1935 வரை பர்மா இந்திய உபகண்டத்தின் ஒரு பகுதியாக வெள்ளையர் ஆட்சிக்குட்பட்டிருந்த காரணத்தால் இந்திய முதலாளிகள், குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பர்மாவில் ஏராளமாக நிலம் வாங்கி அதன் பயனை அனுபவித்தார்கள்.

வெள்ளையர் ஆட்சி ஒழிந்தாலும், முதலாளிகளின் சுரண்டல் தடுக்கப்படாவிட்டால் நாடு அவல நிலை அடைவது திண்ணம் என்று சுதந்திர பர்மா சர்க்கார் கருதியதால், நாட்டிலுள்ள நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டு பர்மியக் குடிமக்களுக்குப் பாகுபாடு காட்டாமல் பிரித்துக்கொடுக்க முற்பட்டுள்ளது. பர்மாவில் உள்ள பெரும் பகுதி நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் அந்நியராக இருப்பதால்தான் நஷ்டஈடு கொடுக்கப் பர்மிய பிரதமர் மறுக்கிறார் என்று கூறலாம். அக்கண்கொண்டு நோக்குவது அவ்வளவு சிறந்ததாகதென்பதுதான் நம் நோக்கம்.

இந்திய முதலாளிகளுக்கு ஏற்படும் நஷ்டம், பர்மிய மக்களின் கஷ்டத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவ்வளவு அதிகமென்றும் கூற முடியாது. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்றவாறு சர்வ தேசக் கண்கொண்டு பார்த்தோமானல் பலர் வாழ்வுக்காக ஒரு சிலர் விட்டுக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். மேலும் இந்தியர் பர்மாவுக்குக் கொண்டு வந்த முதல் பர்மா நாட்டினருக்கு ஒரு நன்மையும் செய்ததாகத் தெரியவில்லை. இதற்குப் போதிய சான்று பர்மிய மக்கள் இன்றும் ஏழ்மையில் வாடி வதைவதுதான்.

இந்திய முதலாளிகளுக்கு நஷ்டஈடு வாங்கித் தர பர்மா சென்றுள்ள இந்தியத் தூதுக் குழு இங்கிலீயில் மிகவும் பொறுப்புடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். இதை உணர்ந்தத்தான் பர்மியப் பிரதமர் தோழர் தாகின்-நூ. தோழர் பக்தவத்சலனரை மேடையில் அமர்த்திவிட்டு, நஷ்டஈடு கொடுப்பதைத்தான் எதிர்ப்பதாகவும், நிலம் பங்கீட்டுக்கொள்கையில் வேற்றுமை காட்டப்படவில்லை யென்றும் (பல இந்தியர்கள் பர்மியக் குடிமக்கள் ஆகியுள்ளனர்) அறிவித்தார். நஷ்ட ஈடுக்காக வாதிட்டால முதலாளித்வ நாடு இந்தியா என்ற பட்டப் பெயர் கிடைத்துவிடுமாகையால் தூதுக்குழுவினர் குறிப்பிட்ட அளவுக்கு விட்டுக்கொடுத்து நல்ல முறையில் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள முயல்வது வரவேற்கத்தக்கதாகும்.

அமெரிக்காவுக்கு பிரிட்டிஷ் எண்ணெய்

லண்டன், ஜூன் 11—

பிரிட்டன் தன் விட்டுமுன்ன எண்ணெயை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் என்று தெரிகிறது. பிரிட்டனிலிருந்து அனுப்பப்பட விருக்கும் பெட்ரோல் செய்வதற்கு உபயோகிக்கப்படும்.

காஷ்மீர் தகராறு விரைவில் தீரலாம்?

லண்டன், ஜூன் 11—

காஷ்மீர் விஷயமாக மத்யஸ்தம் செய்த வைக்கும் வேலையில் சர் ஓவன் டிக்சன் ஈடுபட்டுள்ளது காரணமாக காஷ்மீர் தகராறு வருகிற செப்டம்பர் மாதத்திற்குள் தீரலாம் என்கிற நம்பிக்கை இங்குள்ள வட்டாரங்களில் இருந்து வருகிறது.

கொழும்பு வழியாக செப்டம்பரில் லண்டன் திரும்ப விருக்கும் காமன்வெல்த் உறவு மந்திரி தோழர் பாட்ரீக்கார் டன் வாக்கர் இந்தியா, பாகிஸ்தானுக்குச் சென்று சமரஸம் ஏற்பட்டதற்காக இரு நாடுகளின் தலைவர்களையும் பாராட்டிவிட்டு வரசந்தர்ப்பம் கிடைக்குமென இங்கு கூறப்படுகிறது.

ஸர் ஓவன் டிக்ஸன், தன் முயற்சியில் வெற்றிகிச்சயம் கிடைக்கும் என்று தெரிவித்தது இங்கு மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படுகிறது ஆனல் இவ்விஷயமாக உத்தியோக பூர்வமான கருத்துகள் எதுவும் வெளியிடப்படவில்லை. சர் ஓவன் வேலையை இன்னும் கஷ்டப்படுத்தாமலிருக்கவும், சமரஸம் சீக்கிரம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே இவ்விஷயமாக 'ஒயிட் ஹால்' மௌனம் சாதித்து வருவதாகக் கூறப்படுகிறது.

காஷ்மீர் விஷயமாக லண்டனிலிருந்து எவ்வித கருத்துகளும் வெளியிடப்படவில்லை என்ற காரணத்திற்காக இங்கு இவ்விஷயமாக சிரத்தை இல்லை என்று எண்ணிவிடலாகாது என்பது எடுத்துக்காட்டப்படுகிறது.

—குளோப்

— — —

ஸ்டர்லிங் கடன் முழுவதையும் கொடு

லண்டன், ஜூன் 11—

ஸ்டர்லிங் கடனை பூராவாக பைசல் செய்யும்படி பிரிட்டிஷ் சர்க்காரை எகிப்து கேட்டுக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனல் பிரிட்டன் சிறுகச் சிறுக இக்கடனை தீர்ப்பது என்ற தன் கொள்கையை மாற்ற உத்தேசிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது எகிப்து முழு கடனையும் திருப்பி கேட்க மோசமான நிலையில் இல்லை என்று கூறப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தான் மீதும் படையெடுப்பு!

மனிதராலல்ல; வெட்டுக்கிளிகளால்!

லண்டன், ஜூன் 11—

மத்ய கிழக்கு பிரதேசங்களிலும், வட கிழக்கு ஆப்பிரிக்காவிலும், வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், அந்த ஆபத்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்படக்கூடிய நிலமை இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சூடானில்தான் இவை உற்பத்தியாகின்றனவாம். அங்கு இன்னும் மழை அதிகமாக பெய்ய ஆரம்பித்தால் வெட்டுக்கிளிகள் இன்னும் அதிகமாக உற்பத்தியாகுமென்றாம் வெட்டுக்கிளி ஒழிப்பு நிபுணர் போரிஸ் உவரோவ் கூறுகிறார்.

— —

ஹிமாலயத்தின் மீது ஏறும் முயற்சி

ஆஸ்லோ, ஜூன் 11—

ஹிமாலயத்தில் 23 340 அடி உயரமுள்ள திரிச்மீர் என்ற சிகரத்தின் மீது ஏற நார்வேயிலிருந்து ஒரு கோஷ்டியினர் வரவிருக்கிறார்கள்.

ஆஸ்லோ சர்வகலாசாலை போசிரியர் ஆர்னெநெஸ் என்பவர் இக்கோஷ்டிக்குத் தலைமை வகிக்கிறார். இக்கோஷ்டி ஜூன் மத்தியில் திரிச்மீர் அடிவாரத்திற்கு வந்து சேரும் என்றும் ஜூலை 1௳ மலைமீது ஏற ஆரம்பிக்கும் என்றும் தெரிய வருகிறது.

திரிச்மீர் அடிவாரத்தை பூதம் காப்பதாக அங்கு வசிக்கும் சில சுதேசிகள் நம்புகின்றனராம்.

— — —

அமெரிக்கா மீதே காதல்!

லண்டன், ஜூன் 11—

ரஷ்யாவை தாஜா செய்யும் எண்ணம் இனி நார்வேயாவுக்கு இல்லை என்பது நிச்சயமாகத் தெரியவருகிறது. நார்வே அயல்நாட்டு மந்திரி தோழர் ஹால்வர்ட் லாங் கூறுகையில் நார்வே முழுமனதுடன் பிரிட்டிஷ் அமெரிக்க கோஷ்டியையே ஆதரிக்கும் என்று கூறினர்.

— — —

எலும்புக்கூடுகள் பேசுமா?

லண்டன், ஜூன் 11—

'டெட்மான்ஸ்' தீவு (Deadmans Isle) என்று கூறப்படும் ஷெப்பி தீவில் சில விசித்திரமான சத்தங்கள் கேட்கின்றனவாம். நெப்போலியன் போன காலத்தின் போர் ஜர்கள் இத்தீவில் மாண்டதாகவும் அவர்களின் எலும்புக் கூடுகளிலிருந்து இந்த சத்தம் வந்திருக்க வேண்டுமென்று சிலர் நம்புகிறார்கள். இதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற உறுதியுடன் பிரடெரிக் ஸாண்டர்ஸ் என்பவர் அத்தீவில் பல நாட்கள் தங்க முடிவு செய்திருக்கிறாராம்.

டச்சு நியூகினிபற்றி ஆஸ்திரேலியா

லண்டன், ஜூன் 11—

நியூகினியை இந்தோனேஷியாவிடம் ஒப்படைக்கும் யோசனையை ஆஸ்திரேலியா பலமாக எதிர்க்க ஆரம்பித்திருக்கிறது. ஆஸ்திரேலியாவுக்கு இதனல் பாதகம் ஏற்படக்கூடும் என்றும் நியூகினியை கேட்க இந்தோனேஷியாவுக்கு உரிமை இல்லை என்றும், ஆஸ்திரேலிய அயல்நாட்டு மந்திரி தோழர் ஸ்பெண்டர் கான்பெராவில் செய்த பிரசங்கம் ஒன்றில் கூறியிருக்கிறார்.

டச்சு நியூகினியிலுள்ளவர்கள் 'ஆஸி' நியூகினியிலுள்ளவர்களைப் போலவே இருப்பதாகவும் இந்தோனேஷியர்களைப்போல் இல்லை என்றும் ஆஸ்திரேலியா தரப்பில் கூறப்படுகிறது.

டச்சு நியூகினியை டச்சுக்காரர் நிர்வகிக்க முடியாவிட்டால் ஆஸ்திரேலியா வாங்கி விடலாமே என்கிற யோசனையை ஹெர்பர்ட் இவாட் தெரிவித்திருக்கிறார்.

ஆஸ்திரேலியாவில் இம்மாதிரி கூக்குரல்கள் எழுந்த வண்ணமிருக்கையில் இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சூகர்னோ நியூகினி இந்தோனேஷியாவின் ஒருபாகமாக ஆகாதவரையில் தங்கள் போராட்டம் நிற்கப் போவதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

— —

தோழர்சாம்பசிவத்துக்கு வரவேற்பு

சென்னை, ஜூன். 8—

மலேயா தொழிற்சங்க இயக்கத் தலைவர் தோழர் சாம்பசிவத்திற்கு சென்னை ஜனநாயக பொதுமக்கள் சார்பாக சென்னைமாகாண தொழிற்சங்ககாங்கிரஸ் தலைமையில், செங்கொடி தொழிற்சங்கங்களும், மாணவர் ஸ்தாபனம், மாதர் ஸ்தாபனம், மக்கள் பிரஜா உரிமை சங்கம் முற்போக்கு எழுத்தாளர் சங்கம், ஆரம்ப ஆசிரியர் ஸ்தாபனம், ஆகிய பல ஜனநாயக ஸ்தாபனங்கள் வரவேற்பு அளித்தன.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, தீரமிக்கப் போராட்டம் நடத்திவரும் மலேயா தொழிலாளவர்க்கத்தின் தலைவர்களில் ஒருவரும் மலேயா விடுதலை போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு காலனி ஆதிக்க வெறிபிடித்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு, உலக ஜனநாயக சக்திகளின் உறுதியான பலத்தால் மீட்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டு இன்று, எஸ். எஸ். ராஜூலா என்ற கப்பலில், இந்தியா திரும்பி வந்திருப்பவருமானதோழர் சாம்பசிவத்திற்கு இன்று காலை (8—6 1950) மேற்சொன்ன ஸ்தாபனங்களின் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது. வரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. என சென்னை மாகாண தொழிற்சங்க காங்கிரஸ அறிவிக்கிறார்.

கல்வி மந்திரி சுட்டுக்கொல்லப்பட்டார்

இந்தோ-சீன பயங்கரவாதிகளின் கைவரிசை

சைகோன், ஜூன். 11—

மோட்டார் கார்களில் வருவது சிலரை சுட்டுவிட்டு தப்பி ஓடிவிடுவது போன்ற காரியங்கள் இந்தோசீனவில் இப்பொழுது நடத்தப்பட்டு வருகின்றன. பிரிட்டிஷ் அமெரிக்க புகையிலை கம்பெனிக்காரர் ஒருவர் சமீபத்தில்பயங்கரவாதிகளால்கொல்லப்பட்டிருக்கிறார். இந்த பயங்கரவாதிகளில் சில பெண்களும் இருக்கிறார்களாம்.

வியட்னம் கல்விமந்திரி வாங் குவாங் நதாங் என்பவர் காரில் சென்றுக் கொண்டிருக்கையில் சுடப்பட்டார்.

ரஷ்யாவிலும் சென்னையா?

— —

ஸ்டாக்ஹோம், ஜூன் 11—

ரஷ்ய மந்திரிகள் சிலர்மீது லஞ்சக்குற்றச்சாட்டுகளைஎஸ்தோனியா பாதுகாப்பு மந்திரி உத்ராஸ் சாட்டியிருக்கிறார். கைத்தொழில் மந்திரி மீது கள்ளமார்க்கெட் குற்றத்தையும், காட்டிலாகா மந்திரி, மீன் இலாகா மந்திரி இவர்கள்மீது லஞ்சக் குற்றமும் சாட்டப்பட்டிருக்கிறதாம்.

இனி நடப்பவை

❋

சேரட்டை:—இ. ஜூ. சமகத் தலைக்க விழா (15-வது வார்டுகிளை) 4 6 50 புதன்கிழமை மாலை 6 மணிக்கு நகர மண்டபம் (டவுன் ஹால்) இடவில் தோழர் சி. பி. சிற்றரசு தலைமைவகிப்பார். தோழர் எஸ். எ. இராசமாணிக்கம், திறந்து வைப்பார். தோழர்கள் அ. க. நடராசன், பாலசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

★ 'விதி'யை நம்புவது வீணரின் செயலே ★

விஞ்ஞான வளர்ச்சிக்கு 'விதி' ஒரு முட்டுக்கட்டை

திருமணம் மதச்சடங்காகக் கருதப்படுவது கூடாது

—0—

சமூக நல்வாழ்வுக்கு கர்பத்தடை அவசியம்

பொருளாதார முன்னேற்றத்திலும் நாட்டம் செலுத்தவேண்டும்

பேராசிரியர் சந்திரசேகரர் கருத்து

லண்டன், ஜூன் 11—

இந்தியாவை எதிர்நோக்கியுள்ள சமூக பிரச்னைகளை குறித்து 'யூனெஸ்கோ' பிரசுரம் ஒன்றில் அண்ணாமலை பல்கலைக்கழகப் பேராசிரியர் தோழர் சந்திரசேகர் ஒரு அருமையான கட்டுரையை எழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

சென்ற 30 வருட காலமாக விஞ்ஞானத் துறையில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருந்தும்கூட இந்தியாவில் மரணவிகிதம் ஏராளமாக இருந்து வருகிறது. எவ்வளவோ விஞ்ஞான வழிகளும் சாதனங்களும் இருந்தும்கூட இந்தியாவில் இவ்வளவு உயிர் சேதம் ஏற்படுவானேன்?

விதியின் விளைவு

இந்தியர்களிடையே ஒரு தோல்வி மனப்பான்மை இருந்து வருவதே இதற்கு காரணம், 'விதி அப்படியிருக்கையில் மனிதர்கள் என்ன செய்யமுடியும்' என்று அவர்கள் பேச ஆரம்பித்து முயற்சியைக்கைவிட்டு விடுகிறார்கள் செய்த பாபத்திற்கு அனுபவிக்கிறோம் என்கிற மனப்பான்மை வேறு இருக்கிறது. இம்மாதிரி நம்பிக்கை ஒவ்வொரு சமூகத்திலும் இருந்து வருகிறது என்றாலும் இந்தியர்களிடம் சற்று அதிகமாக காணப்படுகிறது. இந்த நம்பிக்கை எல்லாம்விட்டொழித்தால் நம் முன்புள்ள பிரச்னைகளை தீர்த்துவிட முடியும்.

இந்தியா பாக்கிஸ்தான் ஜனதொகை அதிகரித்து வருகிறதென்பது உண்மைதான். என்றாலும், மிகவும் அதிகமாக ஒன்றும பெருகிவிடவில்லை. 1872-ம் வருட முதல் 1941-ம் வருடம் வரையில் இந்தியாவில் ஜனத்தொகை 54 சதவிகிதமதான் அதிகமாகியிருக்கிறது. பிரட்டனில் 56 சதவிகிதமும், ஜப்பானில் 106 சதவிகிதமும் அதிகமாகியிருக்கிறது.

இந்தியாவில் சீக்கிரத்திலேயே மணம் முடித்துவிடுகிறார்கள். இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் சீக்கிரமாகவோ அல்லது காலந்தாழ்ந்தோ மணம் செய்து கொண்டுவிடுகிறார்கள். மணம் செய்வது மதக் கடமைகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

மணம் செய்துகொள்ளுமுன் ஒருவனுடைய பொருளாதார நிலைமை நல்லமுறையில் இருக்கிறதா, அவனும் பிறர் தயவில்லாமல் வாழ்க்கையை நடத்தமுடிகிறதா என்பதெல்லாம் கவனிக்கப்படுவதில்லை.

திருமணத்தை ஒத்திவைப்பது, படிப்பில் நீண்டகாலம் ஈடுபடுவது தனிப்பட்டமுறையிலும் சமூகத் துறையிலும் முன்னேறுவது வாழ்க்கைத் துணைவரைத் தாங்களே பொறுக்கிக்கொள்வது மற்றும் இவைபோன்ற மேனாட்டில் காணப்படும் வழக்கங்கள் இந்தியாவில் எப்பொழுது அமுலுக்குவருமென்று சொல்வதற்கில்லை. ஆனால் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் இவை ஏற்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு இந்தியாவின் சமூக பிரச்னைகள் தீர்க்கப்பட்டுவிடும்.

இந்தியர்கள் விவசாயத்தையே நம்பியிருக்கின்றனர் என்றும் விவசாயத் துறையில் அபிவிருத்தி ஏற்படுவதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாதென்றும் கைத்தொழிலும் பெருக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கர்ப்பத் தடை அவசியமே

கர்பத் தடை மிகவும் அவசியம்தான் என்றும் இதை இந்தியாவில் அமுல் நடத்துவதில் கஷ்டம் எதுவும் இல்லை என்றும, இவ்விஷயமாக இந்தியாவில் சிரத்தை காட்டப்பட்டு வருகிறது என்றும் அவர் எழுதியிருக்கிறார்.

'மொகஞ்ச-தாரோ'வுக்கு ஆபத்து

கராச்சி, ஜூன் 8

திராவிடரின் பழங்கால பண்பாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ள "மொகஞ்ச-தாரோ நகர்" சின்னங்கள் சிந்து நதி வெள்ளத்தால் மூழ்கடிக்கப்படுமென்ற ஆபத்து ஏற்பட்டுள்ளது.

சிந்து சர்க்கார் இலாகா இஞ்ஜினியர் சிந்து நதி தண்ணீரை வேறு பக்கம் திருப்ப முயன்று வருகின்றனராம். "மொகஞ்ச-தாரோ" சின்னங்கள் பாகிஸ்தானில் உள்ளன

ஆசிரியருக்கு முடங்கல்

எது வகுப்புவாதம் ?

ஐயா,

சர்வகலாசாலை கமிஷன், கல்லூரிகளில், மாணவர்கள் வகுப்புவாரி முறையில் அனுமதிக்கப்படுவதைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையை, சென்னை சர்வகலாசாலையின் சிண்டிகேட் ஆராய்ந்து, நாட்டின் தற்போதைய சமூக நிலைமைகளை கவனித்து, அதற்கேற்ப நியாய உணர்வுடன் வெளியிட்ட அறிக்கைக் கண்டு பாராட்டத்தான் செய்வர், நீதிக்குமதிப்புக் கொடுக்கும் யாவரும். ஆனால் மவுண்ட்ரோடு ஏகாதிபத்தியமான சுதேசமித்திரனோ சிண்டிகேட்டின்மேல் விஷத்தைக் கக்கி தலையங்கம் எழுதியிருக்கிறது. சுதேசமித்திரனின் சேற்றைப்போன்ற தலையங்கத்தைப் படிக்கும் எவரும் ஆசிரியரின் கோரைப் புத்தியை கண்டறிந்து கொள்ளலாம்.

இந்த வகுப்புவாரிமுறைபிரச்னையில் கங்கோபங்கொண்டு தலையங்கம் தீட்டும்போதெல்லாம், வடநாட்டுத் தலைவர்களுடைய அபிப்ராயங்களைத் துணைக்கிழுத்துக் கொள்ளுகிறது. தென்னாட்டிலுள்ள சமூக ஏற்றத் தாழ்வுகளைப்போல், சமூகபிரிவினைகளைப்போல் வடநாட்டில் அவ்வளவாக கிடையாது. எந்நாட்டிலுமல்லாத இப்பிரச்சனையின் வேகம் தென்னாட்டில் அதிகமாக இருப்பதால் இங்கு அவசியம் இந்த வகுப்புவாரிமுறை தேவைப்படுகிறது. இவ்விவரங்களை எல்லாம் அறியாத வடநாட்டுத் தலைவர்கள் வகுப்புவாரி முறை கொடியது, நாட்டுக்கு கெடுதி பயப்பது என்று கூறலாம். ஆனால் இவ்விவரங்களை செவ்வனே கண்டறிந்த ஆரியப் பத்திரிகைகள், இதைக் கண்டிப்பதென்றால் அவர்களின் கோரைகுணம் எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்று தேசிய தோழர்கள் அறியவேண்டுகிறோம்.

வகுப்புவாரி முறையை எதிர்ப்பவர்கள்தான் அதிகம் என்று சுதேசமித்திரன் கூறுகிறது. என்ன ஆதாரத்தைக்கொண்டு இவ்வாறு கூறுகிறதோ தெரியவில்லை. உண்மையிலேயே எதிர்ப்பவர்கள் அதிகமாயிருந்தால் இச்சர்க்காரையே தலைகீழாக புரட்டிவிருக்கும் இச்சமூகம். அப்படியில்லாமல் இருக்கும்போதே தங்களுடைய ஆதிக்கம் சரிகிறதே என்ற காரணத்தால் வாய் கிழிய கூவுகின்றனர். துணிவு இருந்தால் பகிரங்கமாக முன் வரட்டும் பொதுக் கூட்டங்களுக்கு. எதிர்ப்பவர்களும் பேசட்டும். மக்கள் அளிக்கும் தீர்ப்பை காணட்டும். வர முடியுமா இருக்கும் பல்?

சிண்டிகேட்டின் அறிக்கையை கண்டாவது, சர்க்கார், ஆரியத்தின் சலசலப்புக்கு அஞ்சாமல் வகுப்புவாரி முறையை சரியானபடி அமுல் நடத்தி பிற்போக்கு நிலையிலுள்ள தமிழ் குடிமக்களை முற்போக்கடைய சகல விதமான நடவடிக்கைகளையும் உடனே எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்க நீதி வீழ்க அநீதி

எஸ். சிவப்பிரகாசம், எஸ். முத்து
நாகை வெளிப்பாளையம்

காங்கிரஸ் பஞ்சாயத்தில் ஹரிஜனங்களுக்கு இடமில்லை.

நாங்குனேரி, ஜூன் 9—

ஐயா,

நாங்குனேரி தாலுகாவில் கிராமக் காங்கிரஸ் பஞ்சாயத்து தேர்தல் நடைபெற்றது. பெரும்பாலான கிராமங்களிலிருந்து ஹரிஜனங்கள் அபேட்சை பத்திரம் தாக்கல்செய்திருந்தனர். அபேட்சை தாக்கல் செய்திருந்த ஹரிஜன அபேட்சகர்களை 1947-ம் வருஷம் காங்கிரஸில் மெம்பரல்ல இல்லை, கம்யூனிஸ்டு கட்சி, திராவிட கழகம், வழக்கமாய் கதர் உடுத்துபவரல்ல என்ற பலகாரணங்களால், ஏர்வாடி தோழர் வி. பெரியசாமி, இ. கடந்தையாண்டி ஆகிய இருவரை தவிர இதர எல்லா ஹரிஜனங்களின் அபேட்சகர்களை ஒப்புக் கொள்ளாமல் தள்ளும்படி செய்யப்பட்டது.

மேற்கண்ட இருஹரிஜனஅபேட்சகர்களையும் எந்த காரணத்தைக்கொண்டும் நீக்க முடியாத காரணத்தால், இந்த தாலுகாவில் எந்த கிராமத்திலாவது தேர்தல் நடத்தாமல் சமரசமான முறையில் பஞ்சாயத்துகளை அமைத்த காங்கிரஸ் வாதிகளுக்கு, ஏர்வாடி காங்கிரஸ் பஞ்சாயத்தை சமரசமாக முடித்து தேர்தலில்லாமல் முடிக்க மனமில்லையோ? காரணம் மூன்று ஸ்தானங்களுக்கு 3 ஜாதி ஹிந்துக்களும் இரண்டு ஹரிஜனங்களும் அபேட்சகர்களாய் நிற்கிறார்கள். சமரசமாய் முடித்தால் ஒரு ஹரி ஹரிஜனுக்காவது இடம் கொடுக்க வேண்டுமே என்ற காரணத்தாலும், தேர்தல் வைத்துவிட்டால் ஹரிஜன அபேட்சகர் தோல்வியடைந்து விடுவார்கள் என்ற நிச்சயத்தால் தேர்தலை வைத்து, ஹரிஜன இரு அபேட்சகர்களை தோல்வியடைய செய்து மூன்று ஜாதிஹிந்துக்களை வெற்றியடையச் செய்துவிட்டார்கள்.

ஹரிஜன அபேட்சகர்கள், காங்கிரஸ் லட்சியத்தையும், காந்திய திட்டத்தையும் எந்த முறையில் காங்கிரஸ் அன்பர்கள் நடத்துகொண்டார்கள் என்பதை மற்றவர்கள் அறியவே, தாங்கள் தேர்தலில் நின்றார்கள். உண்மையில் அவர்களுக்கு தோல்வி கிடைக்குமென்று தெரிந்துதான் தேர்தலில் நின்றார்கள்.

ஏர்வாடி காங்கிரஸ்வாதிகளின் உண்மை மனநிலையை காலத்துக்கு தக்க மாறிக்கொண்டோம் என்பதை வெளியுலகுக்கே ஒரு ஹரிஜனுக்கு விட்டுக்கொடுக்காமல் காங்கிரஸ் லட்சியத்தைக் கொலை செய்தார்கள்போலும். உண்மையான காங்கிரஸ்வாதிகளென்றால் இரண்டு ஹரிஜன அபேட்சகருக்கும் விட்டுக் கொடுத்திருக்கவேண்டும்.

பி. ராஜாரத்தினம்.,
ஏர்வாடி

* * *

தெ. இ. ரயில்வே அதிகாரிகள் கவனிப்பார்களா?

காக்கன்கரை, சாமல்பட்டி, தாசம்பட்டி, மொரப்பூர், புட்டிரெட்டிபட்டி, பொம்மிடி இந்த ரயில்வே ஸ்டேஷன்களில் இரண்டொருமாச விறகு வியாபாரிகள் சுமார் 150 வாகின் விறகுகள் சப்ளை சேலம் மார்க்கட்டுக்கு காலி வாகின்களுக்கு ரிஜிஸ்டர் செய்து இருக்கிறார்கள். இன்னவரை வாகின் கிடைக்கவில்லை. டை விறகு வியாபாரிகள் சேலம் ரயில்வே அதிகாரிகளுக்குப்பல தந்திகள் கொடுத்தும் 2-மாதமாய் வாகின் சப்ளை செய்யவில்லை. கட்டு விறகு வியாபாரிகள் விறகு லோட் ஆகாமல் இன்றி கட்டக்கூட பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வெட்டி குவிந்து இருக்கும் விறகு உலர்ந்து வியாபாரிகளுக்கு சுமார் ரூ. 10,000 நஷ்டம் ஆகிவிடும்போல்தெரிகிறது. சேலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 150 முதல் 200 வாகின் சப்ளை ஆகியிருந்தது. 2 மாதத்திற்கு 10 15 வாகின்தான் லோட் ஆகியிருக்கிறது. 2 மாதத்திற்கு 300,400 வாகின் சப்ளை ஆகும் இடத்திற்கு வாகினை விடாமல் இருந்தால் வியாபாரிகள் கதி என்னவது? சேலத்தில் ஒரு வண்டு 0—14—0 விலைக்கு விற்ற விறகு இப்பொழுது 1—4—0 1—6—0 வரை விலை ஏறிவிட்டது. இன்னும் சில நாட்களுக்கு வாகின் சப்ளை செய்ய விட்டால் சேலத்தில் விறகு கஷ்டம் அதிகரித்துவிடும். ஆகையால் ரயில்வே அதிகாரிகள் இதை உடனே கவனித்து வாகின் சப்ளை செய்வார்களாக.

ம. ர. நெடுமாறன்
மத்தூர்

டிரிகெவ்லே ராஜிநாமா ?

லண்டன், ஜூன் 10—

ஐ. நா. காரியதரிசி ஜெனரல் தோழர் டிரிகெவ்லே அடுத்த ஜனவரியில் தன் பதவியை ராஜிநாமா செய்ய முடிவு தீர்மானித்துவிட்டார். ஐ. நா. அபிவிருத்தியடையாததைக் குறித்து அவர் வெகு ஏமாற்றமடைந்திருக்கிறார். புது காரியதரிசி ஜெனரல் வந்தால் அவர் புது மனப்பான்மை ஏற்பட வழி செய்ய முடியுமோ என்று இவ எதிர்பார்க்கிறார். ஆனால் இப்பொழுது ஐ. நா. பலம் பெறும் என்பதுபற்றிய உறுதிமொழிகள் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியநாடுகளால் கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்றும் ரஷ்யா இத்தகைய உறுதிமொழி கொடுத்திருப்பதாகவும் ஆகவேதன் பதவியை ராஜிநாமா செய்வதில்லை என்று அவர் தீர்மானித்துவிட்டதாகவும் 'வெஸ்டர்ன் மெயில்' எழுதுகிறது.

டிரிகெவ்லேயை விட்டால் வேறு நபர் இப்பதவிக்கு கண்டு பிடிப்பது கஷ்டம் என்று கூறப்படுகிறது. ரஷ்யாவும் டிரிகெவ்லே இப்பதவியில் இருப்பதை விரும்புவதாகத் தெரிகிறது.

சோஷலிஸ்டுகள் மீது வழக்கு

சின்னமனூர், ஜூன் 6—

பெரியகுளம் தாலுகா சின்னமனூரில் சோஷலிஸ்டுகள் தலைமையில விவசாயிகள் போராட்டம் நடந்துவந்ததில் சர்க்கார் முன்னிலையில விவசாயிகள் குத்தகைக்கு 100-க்கு 15 கலம் தள்ளிக்கொடுக்க வேண்டுமென்று சமரசமாகத் தீர்க்கப்பட்டது. சுமுகமாகத் தீர்க்கப்பட்டும்கூட, டை போராட்டத்தில் பங்கெடுத்ததாக தமிழ்நாடு சோஷலிஸ்டுக் கட்சிக் கூடடுக் காரியதரிசி தோழர் எ. செல்லையா, லேபன் தலைவர் எம். சன்னாசி, சின்னமனூர் யூனியன் காரியதரிசி சின்னசாமி எம். சுப்பையா, வி. முகமது, வி. பேயாண்டி, வி. ராஜு, வி. கருப்பையா, கே. தங்கப்பன், எ. கருப்பையா, ஆர். கந்தசாமி, எஸ். காளியப்பன் ஆகிய 12 சோஷலிஸ்டுகள் மீது 147, 341, 506வது செக்ஷன்களின்படி போலீசாரால் வழக்கு தொடரப்பட்டு, ஜூன் மாதம் 20 ம் தேதி பெரியகுளம சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வாய்தா ஏற்பட்டிருக்கிறது.

டை போராட்டகாலத்தில் சின்னமனூரில் 144 அமுலிலிருந்த பொழுது கோஷங்கள் கோஷித்துக்கொண்டு ஊர்வலம் வந்ததாக மாணிக்கம், சன்னாசி, வல்லப்பன், காமாக்ஷி முதலிய 16 சோஷலிஸ்டுகள் மீது உத்தமபாளையம் பெஞ்ச் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு தலைக்கு ரூ. 10 வீதம் அபராதம் செலுத்தவேண்டுமென்றும் தவறினால் 2 நாள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது.

தோழர்களுக்கு

"மாலைமணி"யில் 'ஆசிரியர் முடங்கல்' என்ற தலைப்பில் வெளிவிடுவதற்கென அனுப்பப்படும் செய்திகள் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பனவாயும் கடிதம் எழுதுவோரின் முகவரி தெளிவாக எழுதப்பட்டுமிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். (ஆ-ர்)

மதுரை மாவட்டத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அ. பிச்சை, அய்யாசாமி, இருளப்பன், ஆகியோர்கள் தலைமையில் சுமார் 200 தொண்டர்கள் மாநாட்டு அலுவல்களைக் கவனித்தும் வெளியூர் பிரதிநிதிகளை அன்புடன் வரவேற்று உபசரித்தும் மிகத்திறமையாக சேவை செய்தனர்.

மாலை 4-மணிக்கு இயக்கத் தோழர்களின் நாட்டுப்பண் ஒலிக்க, மாநாட்டுப் பந்தலில் வெகுவிமரிசையாக மாநாடு ஆரம்பமாயிற்று.

வரவேற்புப் பேச்சு

பல ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளையும், ஏராளமான பார்வையாளர்களையும் வரவேற்று வரவேற்புக்குழு தலைவர் தா. ஆவடையப்பன், தனது வரவேற்புப் பேச்சை நிகழ்த்தினர் ஆவடையப்பன்.

அடுத்தபடியாக பலத்த ஆரவாரத்திற்கு இடையே மாநாட்டை, குடந்தைத் தோழர் கே. கே நீலமேகம் ஆரம்பித்துவைத்து, திராவிட முன்னேற்றக் கழகம் செய்துள்ளசேவையினையும், ஆற்ற வேண்டிய அரும்பணியினையும் விவரித்து நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். (பேச்சு முன்னரே வெளிவந்துள்ளது)

இத்துடன், மட்டில்லா மக்களின் ஆர்வத்துடனிடையே தலைவர் தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாளையும் மாநாடு தொடர்ந்து நடைபெறும். மக்கள் இன்னும் வந்துகொண்டே இருக்கின்றனர்,

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில் தோழர் ஆவடையப்பன் ஆற்றிய வரவேற்புரையாவது:—

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு இங்கே கூடியுள்ளது. மாநாட்டின் முயற்சியிலே பங்குகொள்ளவும், அதனை வெற்றிபெறச் செய்வதற்கான முறையிலே பணியாற்றவும், அதன் நிகழ்ச்சிகளை பார்த்து மகிழவும் வெள்ளம்போல் கூடியிருக்கும் உங்களைக் காணப் பெருமகிழ்வடைகிறேன். கழகத் தோழர்களும், கழகத்தினிடத்து பற்றுக்கொண்டோருமாகிய உங்கள் அனைவரையும், வரவேற்புக்குழுவின் சார்பாக "வருக, வருக" என வாயார வரவேற்று, 'வாழ்க, வாழ்க' என மனமார வாழ்த்துகிறேன்.

திராவிட முன்னேற்ற கழகத் தோற்றத்திற்குப் பிறகு, பாண்டிய மண்டலத்திலே கூடும் முதல் மாநாடு இதுதான். இந்த வாய்ப்பு மதுரை மாவட்டத்திற்குக் கிடைத்ததுகண்டு மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தோர் அனைவரும் பெருமித உணர்ச்சிகொள்வார்கள் என்பது எனது உள்ளக்கிடக்கை.

வரலாற்றுச் சிறப்பும் [illegible]யற்கை வளச் சிறப்பும் [illegible]ங்கே பெற்று, பாண்டிய [illegible]டலத்திலே ஒரு எழி[illegible] [illegible]ா என வழங்கும் சோலை[illegible]னிலே, முன்னேற்றக் [illegible]ழக மாநாடு கூடுவது காண, உள்ளபடியே பெருமையும் பூரிப்பும் கொள்கிறோம்.

மதுரை மாவட்டம் எந்த [illegible]ற மாவட்டத்திற்கும் பின்னடையாத வகையிலே தொண்டாற்றி வருகிறது என்பதை பெருமித உணர்வோடு இங்கு வெளிப்படுத்த விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தின் பட்டிதொட்டிகளிலெல்லாம் கிளைக் கழகங்களை கிளைத்தெழச் செய்துள்ளோம். கிளைக் கழகங்கள் காணும் முயற்சி முடிந்துவிடவில்லை; இன்னமும் நடைபெற்றுக்கொண்டுதானிருக்கிறது. அஞ்சா நெஞ்சமும் அசையா ஊக்கமும், உண்மை உழைப்பும், உறுதியானநெறியும்சலியா ஆர்வமும் போரிட்டு வெற்றிகொள்ளும் பண்பும் படைத்த கழகத் தோழர்கள் இந்த மாவட்டம் எங்கும் பரவியிருப்பதோடு, ஆக்க வேலைக்கான திட்டங்களை, மாநாட்டிலே வந்து அவர்கள் தழுவியுள்ளார்கள் என்பதை அறியும்போது பெருவகை கொள்கிறேன்.

நாட்டின் நலிவைப் போக்குவதற்கான வழிவகைகளைக் காண, திராவிடத் தீரர்கள் நாம் இங்கே கூடியுள்ளோம். வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் திராவிடத்திற்கு எழுச்சியூட்டவும், அதன் மீது அழுத்திக்கிடக்கும் பிறநாட்டு ஆதிக்கச்சுமைகளை அகற்றிவிடவும், அதன் பொலிவை யெல்லாம் மங்கச் செய்துகொண்டிருக்கும் ஆரிய மாசுகளைப் போக்கவும், எவருக்கும் அடிமையாகாத இன்ப திராவிடத்தைக் காணவும் நாம் கழகம் கண்டுள்ளோம். இலட்சியப் போராட்டத்திற்காக நாம் கூடும் பாசறைக் கூட்டமே, இத்தகைய மாநாடு ஆகும்!

இப்பொழுது நிலவிவரும் வடநாட்டு, பாசிச, சுரண்டல் ஏகாதிபத்ய ஆட்சியை நீக்கி, திராவிடத்தில் தனி சமதர்மக் கூடியரசு ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது அரசியலிலே நாம் கொண்டுள்ள கொள்கையாகும். இன்று இருந்துவரும் பணக்காரன்—ஏழை, முதலாளி—தொழிலாளி, பிரபு—பஞ்சை, ஆண்டை—அடிமைபோன்ற பேதநிலைமைகளைப்போக்கி, சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதி எல்லோர்க்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும் என்பது, பொருளாதாரத் துறையிலே நாம் கொண்டிருக்கும் கோட்பாடாகும். சமுதாயத்தைப் பேதப்படுத்திச் சின்னாபின்னமாக்கிவரும் சாதிவேறுபாடு, சமய வேறுபாடுகளையெல்லாம் அழித்து, மனிதனை மனிதன் என்று நினைக்கும்படி எவரையும் செய்யவேண்டும் என்பது, சமுதாயத்திலே நாம் காண விரும்பும் குறிக்கோளாகும். அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்றிலேயும் அடிமைப்பட்டுக்கிடக்கும் திராவிடத்தை விடுதலைபெறச் செய்யவே நாம் முன்னேற்றக் கழகம் கண்டுள்ளோம்

திராவிட முன்னேற்றக் கழகம் இலட்சியத்திற்கான விடுதலைப் போராட்டம் நடத்துவதற்காகத் தோன்றிய கழகமேயல்லாமல், சுயநலத்திற்காக அரசியல் சூதாட்டம் நடத்தத் தோன்றியதல்ல பட்டம் பதவிகளின் படிக்கட்டுகளில் ஏறி ஏறி இறங்கி ஏதாவது கிடைக்காதா என்று ஏங்கும் ஏமாளிகளல்ல நாம்; பட்டிதொட்டிகளெல்லாம் சுற்றிச்சுழன்று, சூறாவளிப்பிரசாரத்தின் மூலம், பாமரர்களை பகுத்தறிவாளர்களாக ஆக்கும் நல்ல பணியிலே ஈடுபட்டிருப்பவர்கள் நாம். நாம் சமூகத்தைத் தனிமனிதன் தேவைக்கு என்ற நிலைமையில் வைக்காமல், நாட்டிற்குப் பொதுவாக உரிமைப்படுத்தியுள்ளோம். தனிப்பட்ட ஒருவரின் சுயநலத்தின் அடிப்படையாக எழும் சர்வாதிகாரத்தையே சட்டமாகக் கொள்ளவேண்டும் என்பதை மறுத்து கண்டகண்டபடி கூறியவற்றையெல்லாம் கண்மூடித்தனமாக ஏற்கவேண்டும் என்பதை வெறுத்து சிந்திக்கும் ஆற்றலை ஒழித்துவிட்டு முட்டாள்களாகவே இருக்க வேண்டும் என்ற முழுமூடநிபந்தனையை ஒதுக்கி, தான் செய்வது எல்லாம் சரி, ஏன் என்று எவரும் கேட்கக்கூடாது என்ற பாசிச மனப்பான்மையை உதறித்தள்ளி, பண்பைவிட, கொள்கையைவிட, கோட்பாட்டைவிட பணமே பெரிது என்ற முதலாளித்துவமனப்பான்மையை அருவருத்து ஒதுக்கி, பொறாமை, வஞ்சகம, சூழ்ச்சி, சுயநலம். பொய, புனைசுருட்டு, பேராசை, கீழ்த்தரம் ஆகியவைகளின் அடிப்படையில் செய்யப்படும் செயல்களுக்கெல்லாம் ஒத்தாத மறுத்து, கள்ளம், கவடு, சூதுவாதற்ற தூய்மையான அடிப்படையில நின்று பரந்த நோக்கத்தோடு, உயரிய கொள்கையுடன், ஜனநாயக முறையில், நாம் எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்துள்ளோம். அதன் வளர்ச்சி அரசாங்கத்தையும், மாற்றுக்கட்சியினரையும் திகைக்கவைக்கும் அளவில், திரை வைக்கும் வகையில் நாளுக்குநாள் ஓங்கி உயர்ந்து வருகிறது. "இன்பத் திராவிடமே எமது இலட்சியம்" என்று எக்காளமிட்டு முழக்கமிட இலட்சக்கணக்கான வீரர்கள் முன்னேற்றக் கழகக் கொடியின நிழலிலே நாடெங்கும் திரள ஆரம்பித்துவிட்டார்கள். பொது மக்களின் ஆதரவும், அன்பும் நாளுக்குநாள் பெருகி வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம். இங்கு கூடியிருக்கும் பெருந்திரளான மக்கட் கூட்டமே, இல்லை, வீரர்கள் கூட்டமே அதற்குப் போதுமான எடுத்துக்காட்டாகும். விடுதலை வேட்கையுற்றோர் அனைவரும் ஒன்று திரண்டு இருக்கும் இந்த மாநாடு, உண்மை உணர்ச்சியின் ஒருபெரும் உருவமாகும். ஒரு பெரும் உருக்கொண்டு எழுச்சியுற்றிருக்கும் இந்த உணர்ச்சி உள்ளதைத்தான, இன்றைய அரசாங்கம் காண மறுக்கிறது; இதன் நோக்கத்தைக் கேட்க மறுக்கிறது! அலட்சிய அறிவுடன அடக்குமுறைகள் கொண்டு இதனை அடக்கி ஒடுக்கிவிடலாம் என்று அது கனவு கண்டு கொண்டிருக்கிறது ஆணவ சர்வாதிகார ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்து மக்கள் சக்தி திரண்டு எழுந்துவிட்டால், அதனை அடக்கி ஒடுக்க எந்த ஆற்றலாலும் முடியாது; முடிந்ததில்லை என்பதைத்தான் வரலாறு நன்கு

தாராபுரம் தொகுதியில்

30-6-50 ல் நடைபெறும்

சென்னை சட்டசபை தேர்தலில்

ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்

திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு

பச்சை பெட்டியில்

தயவுசெய்து ஓட்போடவும்

எடுத்துக்காட்டி வருகிறது.

இன்றைய அரசாங்கத்திற்கு ஆளத்திறமையில்லை என்பதற்கான எடுத்துக்காட்டுக்களை நமது கழகம் ஆயிரம் மேடைகளில் எடுத்துக்கூறி விளக்கங் கொடுத்து வந்துள்ளது. பசியைப் போக்க, பட்டினிச் சாவைத் தடுக்க, வறுமையை ஒழிக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க, விளைவைப் பெருக்க உற்பத்தியை மிகுவிக்க, கல்வியைப் பரப்ப, எழுத்தறிவின்மையைப் போக்க, நீதியை நிலைநாட்ட நிர்வாகத்தை நடத்த இன்றைய காங்கிரஸ் அரசாங்கத்திடம் போதிய திட்டம் இல்லை! தேவையான திட்டங்களைத் தீட்டத்திறமையுமில்லை! இப்பொழுது மக்களின் அடிப்படை உரிமைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. வரிச்சுமைகளோ ஒன்றின் மேல் ஒன்றாக வளர்ந்துகொண்டே இருக்கின்றன, ஆளவந்திருக்கும் காங்கிரஸ் ஆட்சியாளர்களால் கொடுக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் ஒன்றேனும் இதுவரையில் சரியானபடி நிறைவேற்றப்படவில்லை, இப்படிப்பட்ட தீய சூழ்நிலையில் கிடந்து தவிக்கும் மக்களுக்குத் தெளிவுஉண்டாக்கவும், அவர்களை நேரிய வழியிலே நடத்திச் செல்லவும, அவர்கள் வாழ்விலே இன்பம் பொங்கச் செய்வதற்கான திட்டங்கள் தீட்டித்தரவும் பாடுபட்டு வரும திராவிட முன்னேற்றக் கழகத்தை நசுக்கிவிட அரசாங்கம் ஒரு பக்கமும், காங்கிரஸ் மற்றொரு பக்கமும் வைதிகம் வேறொரு பக்கமும் நின்று திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. இவைகள் ஏதுவும் எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றிப்பாதையிலே வீறுடன் நடந்துசெல்ல, கழகத்தை அசைக்க முடியாத அளவுக்கு வலிவுள்ள இரும்புக்கோட்டையாக ஆக்கவேண்டிய பொறுப்பு கழகத்தைச்சார்ந்த ஒவ்வொருவரின நீங்காக் கடமையாகும்.

திராவிடத்தை, அரசியல் பொருளாதாரம், கலாசாரம், மொழி ஆகியவற்றிலெல்லாம் வடநாட்டிற்கு என்றென்றும் அடிமைப்படுத்தி வைத்திடும் முறையில், இந்திய அரசியல் அமைப்பு அமைக்கப்பட்டு, அது ஆட்சிபுரியவும் தொடங்கிவிட்டது. மாகாண அரசாங்கத்தின் உரிமைகளெல்லாம் மத்திய அரசாங்கத்தால் பிடுங்கிக்கொள்ளப்பட்டுவிட்டன. திராவிடம், வடவர் ஆதிக்கம் நிறைந்த மத்திய அரசாங்கத்தின் எடுபிடியாக ஆகிவிட்டது. தமிழகத்தில் தாய்மொழியாகிய தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படாத நிலையில், தேவையற்ற இந்தி மொழி கட்டாயமாகத் திணிக்கப்பட்டுள்ளது. இந்த அவலநிலையை, இழிநிலையை, அவசியமற்ற நிலையைப் போக்க தீரத் திராவிடர்கள் அனைவரும் போராட்டத்தில் இறங்க வேண்டியவர்களாகக் கொண்டுவந்து விடப்பட்டுவிட்டார்கள். போராட்டம் நடத்தும் அவசியம் பற்றியும் முறை பற்றியும், மேற்கொள்ளவேண்டிய கடமைகள் குறித்தும் மாநாட்டில் பங்குகொள்ளும் தலைவர்கள் விளக்கந்தருவார்கள் என்று கருதுகிறேன்.

இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கும் கொடிய திட்டம் அரசியலாரால் தீட்டப்பட்டிருக்கும் இந்த நெருக்கடியான நேரத்தில் இந்த மாநாடு கூடுவது மிகமிக இன்றியமையாததொன்று என்றே கருதுகிறேன்.

விடுதலைப் போராட்டப் படையை நடத்திச் செல்லும் படைத் தலைவர்களிலே ஒருவராக இருந்து போராடும் வீரமும் பணிபுரியும் பண்பும் உள்ள உறுதியும், நீங்காக் கொள்கைப் பற்றுங்கொண்டவரும், மாநாட்டின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவருமான இளஞ் செம்மல் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை வருக, வருக என இரு கை கூப்பி உங்கள் சார்பாக வரவேற்கிறேன்.

விடுதலைப் போராட்டத்திற்கான திட்டம் தீட்டித்தரும் தீரரும், இயக்கத்தின் நீண்டகாலத்தலைவர்களில் ஒருவரும், அயராது உழைக்கும் அருந்திறமுடையவரும், மாநாட்டைத் துவக்கிவைக்க இசைந்திருப்பவருமான குடந்தைத் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களையும் வருக, வருக எனக்கூறி வரவேற்கிறேன்.

மற்றும் அறிவுரை வழங்க வந்திருக்கும் கழகத்தின் பொதுச்செயலாளர் அறிஞர் சி. என். அண்ணாத்துரை அவர்களையும் ஏனைய கழகச் சொற்பொழிவாளர்களையும் வரவேற்கிறேன்,

ஈண்டு குழுமியிருக்கும் உங்கள் எல்லோர்க்கும் மீண்டும் ஒருமுறை வரவேற்புக் கூறி, வாழ்த்து வழங்கி, மாநாட்டை வெற்றிகரமாக முடிக்க உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை என்று வேண்டிக்கொண்டு என்னுடைய மனமார்ந்த வணக்கத்தை வரவேற்புக்குழுவின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.